# <u>திருமங்கலம் நகராட்சி</u>

## <u>கூட்டப் பொருள்</u>

1)திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான வார்டு எண்.6,7,8,9,14 மற்றும் இதர பகுதிகளில் தனியார் மூலம் 80 தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு தூய்மை செய்யும் பணிக்கு ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் நிறுவனத்தின் ஒப்பந்த காலமானது 31.12.2021 அன்றுடன் முடிவடைவதால் மேலும் 1 மாத காலத்திற்கு (01.01.2022 முதல் 31.01.2022 வரை) ஒப்பந்தத்தினை ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த விலை விகிதத்திலேயே பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:

1) அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த விலை விகிதத்திலேயே பழைய ஒப்பந்ததாரரிடம் மேலும் ஒரு மாதத்திற்கு காலநீட்டிப்பு செய்ய அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2371: அனுமதிக்கப்பட்டது.**

2)திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட உசிலை ரோடு மயானத்தில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகனமேடையினை பராமரித்து வரும் பணியினை மேற்கொள்ள இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க. எண்.2420/2014/இ1, நாள். 31.12.2020 அன்று PEOPLE's TRUST IN TECHNICAL INSTITUTE திருமங்கலம் நிறுவனம் மூலம் 01.01.2021 முதல் 31.12.2021 வரை பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்பெற்றது. இந்நிலையில் மேற்காணும் நிறுவனத்தின் பணிக்காலம் 31.12.2021 முதல் முடிவடைகிறது. மேலும் நவீன எரிவாயு தகனமேடையினை பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள PEOPLE's TRUST IN TECHNICAL INSTITUTE திருமங்கலம் நிறுவனம் 27.12.2021 அன்று விருப்பக் கடிதம் சமர்ப்பித்துள்ளது. எனவே ஏற்கனவே இந்நகராட்சியின் மூலம் விதிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றி இப்பணியினை மேற்கொள்ள 01.01.2022 முதல் 31.12.2022 வரை ஒரு வருட காலத்திற்கு மட்டும் PEOPLE's TRUST IN TECHNICAL INSTITUTE திருமங்கலம் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.கு.</u>**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று PEOPLE's TRUST IN TECHNICAL INSTITUTE திருமங்கலம் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2420/2014/இ1

**தீர்மானம் எண்.2372: அனுமதிக்கப்பட்டது.**

3)நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண்.32454/2021/அம்ருட்–2 நாள்.17.12.2021 ன் செயல்முறைக்கடிதத்தில் 15 வது நிதிக்குழு சுகாதாரத்துறை குறிப்பிட்ட மானியம் தேசிய சுகாதாரப்பணி 2021–22 ன் கீழ் திருமங்கலம் நகர்ப்பகுதியில் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர்ப்புற சுகாதார ஆரோக்யமையம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழஙகப்பட்டதுடன் அதற்குரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று கட்டுமானப்பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சி வார்டு எண்.2 முகமதுஷாபுரம் தெரு–4 ல் அமைந்துள்ள பூஙகா பயன்பாட்டிற்கான இடத்தில் உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்று நகர்ப்புற சுகாதார ஆரோக்யமையம் கட்டுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.2373: அனுமதிக்கப்பட்டது.**

4)நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண். 21191/2021/IHSDP.2 நாள். 07.10.2021 ம் தேதிய கடிதத்தில் 15வது மத்தியநிதிக்குழு மானியம் 2020–21 ன் Tied Grant மற்றும் Untied Grant ன் கீழ் தலா ரூ.1.39 கோடி வீதம் ரூ.2.78 கோடி நிதி விடுவிக்கப்பட்டு இதற்கான பணி மேற்கொள்ள வழிகாட்டு நெறிமுறை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் 2020–21 Tied Grantன் கீழ் ரூ.1.39 கோடி மதிப்பீட்டில் எட்டு எண்ணிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. தற்போது 2020–21 Untied Grant ன் கீழ் ரூ.1.39 கோடி மதிப்பீட்டில் கீழ்காணும் பதினொன்று எண்ணிக்கை பணிகள் மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | 16 | Supply and fixing of 62.5 KVA Generator with roofing arrangements @ Sholavandhan road Sandhaipettai Tank in W.No.16 @ Tirumangalam Municipality | 9.30 |
| 2 | | Providing CC road Pavement @ Karisalpatti Compost yard | 45.00 |
| 3 | 10,12, 13,14, 15& 26 | Providing & Laying Interlock concrete paverblock & CC Pavement for Water supply damaged roads @ Munisif Court Road in W.No 10,12,13 (R348,352,361), Arumugam North 2nd street (R231) and Arumugam Middle 12th street in W.No.8 (R220), Rajaji 1st street in W.No.12 (R355) , Chinnakadaiveedhi in W.No.22 (R478), South Street in W.No.26 (R503) @ Tirumangalam Municipality | 7.00 |
| 4 | 14 | Construction of Storm Water Drain @ Sengulam East 3rd Street in Ward No.14 (R432) @ Tirumangalam Municipality | 5.00 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 8 | Construction of Culvert @ Arumugam Main road in Ward No.8 (R260) @ Tirumangalam Municipality | 0.60 |
| 6 | 2,5,7, 8,9,14, 16 | Construction of Compound wall @ Palaniyapuram OHTin W.No.2, Jawahar Nagar OHT in W.No.5, Zion Nagar OHT in W.No.7, Karpaga Nagar OHT in W.No.8,Sonaimeena Nagar OHT in W.No.9,,Sengulam OHT in W.No.14, Weekly Market OHT in W.No.16 @ Tirumangalam Municipality | 46.00 |
| 7 | 16 & 26 | Replacement of Pumps,Motors & Cables @ South street Sewerage Pumping Station and Supply & erection of Motors , Cables, Valves @ Sandhaipettai Sump in W.No.16 & 26 | 5.60 |
| 8 | 5 | Providing Cement Concrete Pavement for Water supply damaged roads @ Jawahar Nagar 12th street in W.No.5 (Unicode R128 & R129) | 5.20 |
| 9 | 26 | Providing & Laying Interlock concrete paverblock with Storm Water Drain @ South street east cross street Opposite side of Community Toilet in W.No.26 (Unicode R 505) | 6.00 |
| 10 | 10 | Providing & Laying Interlock concrete paverblock with Storm Water Drain @ Munisif court road OHT (Municipal office Premises) in W.No.10 (R348) | 7.30 |
| 11 | 10,16 & 26 | Replacement of UG cables and Providing Sewage pipeline arrangement,Electrical arrangements @ Virudhunagar road MCC, Usilai road MCC, South street MCC and Municipal office in W.No.10,16 & 26 | 2.00 |
| | | Total | 139.00 |

மேற்காணும் பணிகளை இந்நகர்ப்பகுதியில் மேற்கொற்வதற்கு வரிசை எண். 2 மற்றும் வரிசை எண்.6 க்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் உரிய நிர்வாக அனுமதி பெறுவதற்கும் வரிசை எண். 1 மற்றும் 3 முதல் 5 வரை உள்ள பணிகள் மற்றும் வரிசை எண். 7 முதல் 11 வரை உள்ள பணிகளுக்கு தனி அலுவலரின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.75/2021/இ1**

**தீர்மானம் எண்.2374:** **அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்)பெர்பெற்றி டெரன்ஸ் லியோன்,**
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
திருமங்கலம்.

/உண்மை நகல்/

ஆணையாளர்
திருமங்கலம் நகராட்சி.